**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 158/2019**

பெயர் : வாசுதேவன் P.W.2. Cross Continuation

த/பெ. : நாகராஜன்

தேதி : 12.02.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி: –**

நான் வாதியின் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். தாவா சொத்தை சுற்றி வாதிகள் கம்பி வேலி அமைத்துள்ளார்கள். தற்போது தாவா சொத்தில் 3ம் வாதி சவுக்கு போட்டுள்ளார். 3 வருடங்களுக்கு முன்னர் சவுக்கு போடப்பட்டுள்ளது. அதற்கு முன்பு 25 வருட காலமாக வாதிகளின் அனுபவத்தில் தான் தாவா சொத்து இருந்தது. 1ம் பிரதிவாதி எங்கள் கிராமத்தில் நிறைய சொத்துகளை வாங்கியுள்ளார். ஆனால், தாவா சொத்தை கிரயம் வாங்கியுள்ளாரா என்று தெரியாது. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அதன் உரிமையாளரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதிகளிடமிருந்து மேற்படி நிறுவனம் வேறு சொத்துகளை கிரயம் பெற்றுள்ளார்கள். ஆனால், தாவா சொத்தில் கிரயம் பெறவில்லை.